Higher Education (A2) Department
Secretariat
Chennai - 9

**Letter No. 16738/A2/2010-1 Dated 27.09.2010**

TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
DAOCA
05 OCT 2010
CHENNAI-600 005.
5362

From
Thiru V.Govindaswami, B.Sc., M.A.,
Deputy Secretary to Government.

To
The Commissioner of Technical Education, Chennai - 600 025 (w.e).
The Director of Collegiate Education, Chennai - 600 006 (w.e).
The Commissioner of Archives and Historical Research, Egmore, Chennai – 600 008(w.e).
The Member Secretary, Tamil Nadu State Council for Science and Technology, Chennai – 600 025 (w.e).
The Executive Director, Tamil Nadu Science and Technology Centre, Chennai – 600 025 (w.e).
The Vice-Chairman i/c, Science City, Chennai – 600 025 (w.e).
The Registrars of all Universities under the control of Higher Education Department (w.e).
Section Officer (OP), Higher Education Department, Chennai – 9 (w.e).

Sir/Madam,

Sub: Human Rights - United Nations General Assembly – Resolution adopted – Declaration on the "Right and Responsibility of Individuals, Groups and Organs of Society to promote and protect Universally Recognised Human Rights and Fundamental Freedoms" – Request for giving wide publicity – Reg.

Ref: From the Secretary to Government Public (HR) Department, Secretariat D.O. Letter No. 40804/HR/2009-1 dated 02.09.2010.

*****

I am directed to enclose a copy of reference cited together with its enclosures and to state that the National Human Rights Commission has conveyed that the United Nations General Assembly adopted resolution on the occasion of the 50th Anniversary of Universal Declaration of Human Rights, a Declaration on the "Rights and Responsibility of Individuals, Groups and Organs of Society to promote and protect Universally Recognised Human Rights and Fundamental Freedoms".

2. I am to enclose a copy of the Declaration both English and Tamil version with a request to give wide publicity by displaying the above declaration in the notice board of your office and the subordinate offices coming under your control and the Educational Institutions working under your control.

3. The above instructions may be followed scrupulously and action taken report may be sent to Government in due course.

Yours faithfully,

for Deputy Secretary to Government.

Copy to:
Public (HR) Department,
Chennai-9.

## பொது (மனித உரிமைகள்)த் துறை

உலகளாவிய அளவில் ஏற்கப்பட்ட மனித உரிமைகள், அடிப்படை உரிமைகளை வலுவாக்கவும் பாதுகாக்கவும், தனி நபர்கள், சமுதாய குழுக்கள் மற்றும் அமைப்புக்களின் உரிமை மற்றும் பொறுப்புகள் பற்றிய உறுதிமொழி ஆவணம்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்கப்பட்ட தீர்மானம்.

*தீர்மானம் எண் 53/144 நாள் 09.12.1988*

<u>பொதுச் சபை</u>

I. உலகின் அனைத்து நாடுகளிலுள்ள மக்களின் உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் வலுவாக்கவும், பாதுகாக்கவும், ஐக்கிய நாடுகள் சாசனத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை மீண்டும் உறுதி செய்கிறது.

II. மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும், உரிமைகளையும் உலக அளவில் வலுவாக்கி, மதித்து மேம்படுத்த அவற்றைக் கடைப்பிடிக்க உலகளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் அடிப்படைக் கூறுகளான, மனித உரிமைகள் குறித்து, உலகளவில் எடுக்கப்படும் உறுதி மொழி மற்றும் மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய ஒப்பந்தங்களின் முக்கியத்துவத்தையும், ஐக்கிய நாடுகளிலும் பிற நாடுகளிலும் பின்பற்றப்படுகின்ற மனித உரிமைகள் பற்றிய பிற ஆவணங்களின் முதன்மையையும் மீண்டும் உறுதி செய்தல்.

III. உலக சமுதாயத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இனம், நிறம், பாலினம், மொழி, சமயம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமுதாயப் பின்புலம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து அடிப்படையிலான வேறுபாடுகள் உட்பட வேறு எந்த வகையான வேறுபாடுகளும் இன்றி, மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் மதிப்பதுடன் அவற்றை வலுவாக்கி ஊக்குவிப்பதென்று தங்களுடைய கடமைகளைக் கூட்டாகவும் தனியாகவும் நிறைவேற்றுவர் என்பதை வலியுறுத்துதல். இந்த சாசனத்தின் படி இந்த கட்டுப்பாட்டை நிறைவேற்றுவதற்கு உலக நாடுகளின் ஒத்துழைப்பை பெற வேண்டியதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தல்.

IV. அக்கறையின்மை காரணமாக நேர்கின்ற பெரிய அளவிலான, வெளிப்படையான மனித உரிமை மீறல்கள் உட்பட மக்கள் மற்றும் தனி நபர்களின் உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் மீறப்படுவதை மக்களுக்குப் பயன்தரும் வகையில் நீக்கிட உதவும் வகையில் தனி நபர்கள், குழுக்கள் மற்றும் சங்கங்களின் பயனுள்ள பணிகளை ஊக்குவிப்பதுடன் மக்கள் சார்பாகத் தீர்மானம் செய்வதற்கு, மக்களுக்குள்ள உரிமை, மற்றும், நாட்டின் உடைமைகள் மற்றும் இயற்கை வளங்களை முற்றிலுமாகப் பெறுவதற்கு, மக்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமை ஆகியவற்றை ஏற்க மறுப்பதால், நேர்கின்ற அனைத்துவகை இன வேறுபாடுகள், குடியேற்றக் கொள்கை மாற்றங்கள் வெளிநாட்டவர் ஆதிக்கம் நாட்டின் நல்லாட்சிக்கு, நாட்டின் ஒற்றுமைக்கு அல்லது எல்லையோரப் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஆகியவற்றை பயன்தரும் வகையில் அகற்றிடத் தனிநபர்கள் குழுக்கள் மற்றும் சங்கங்கள் ஆற்றிடும் பணிகளுக்கு உலக நாடுகள் ஒத்துழைப்பு தருவதை ஏற்றல்

V. உலக நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கும் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் அனுபவிப்பதற்கும் இடையேயான தொடர்பை மனதளவில் உணர்தல். உலக அமைதி மற்றும் பாதுகாப்பு இல்லாவிட்டால் மனித நல்லிணக்கம் அமையாது என்பதை கவனத்தில் கொள்ளுதல்.

VI. மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்கள் அனைவருக்கும் பொதுவானவை, பிரிக்கமுடியாதவை, ஒருவரையொருவர் சார்ந்தவையும் தொடர்புடையவையுமாகும் என்பதை வலியுறுத்தல். இந்த உரிமைகள் நேர்மையாக, நியாயமாக சமஅளவில் செயலாக்கப்பட வேண்டுமென்பதையும், அந்த உரிமைகளும் சுதந்திரங்களும் ஒன்றுக்கொன்று பாதகமின்றிச் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துதல்.

VII. மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் வலுப்படுத்தி பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு அரசிடம் உள்ளது என்பதை வலியுறுத்தல்

VIII. தேசிய அளவிலும், உலக அளவிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களை மதிக்கவும் அவை பற்றிய அறிவை வளர்க்கவும் தனி நபர்கள், குழுக்கள் சங்ககளுக்குரிய உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அங்கீகரித்தல்.

<u>உறுதிமொழி</u>

<u>பிரிவு 1</u>

தேசிய மற்றும் உலக அளவில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் உணரச் செய்வதற்கும் வலுப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்வதற்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

<u>பிரிவு 2</u>

1. ஒவ்வொரு மாநிலமும் தன்னுடைய அதிகார வரம்பிற்குள் உள்ள அனைத்து நபர்களும், தனித்தனியாகவும் கூட்டாகவும் அனைத்து உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிக்க இயலுவதை உறுதி செய்வதற்குத் தேவையான சமூக, பொருளாதார அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் தேவையான அனைத்து நிபந்தனைகளையும் உருவாக்கவும் சட்டபடி உறுதியளிக்கவும் தேவையான அத்தகைய நடவடிக்ககைகளைப் பின்பற்றுவதன் மூலம் ஏனையவற்றிற்கிடையே அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தி செயற்படுத்துவது ஒவ்வொரு மாநிலத்தின் தலையாய கடமையும் பொறுப்பும் ஆகும்.

2. தற்போதைய உறுதி மொழியில் குறிப்பிடப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்கு திறம்பட உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்குத் தேவையான அத்தகைய சட்ட நிருவாகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஒவ்வொரு மாநிலம் மேற்கொள்ள வேண்டும்.

<u>பிரிவு 3</u>

மனித உரிமைகள் மற்றும் அடிப்பட சுதந்திரம் குறித்து ஐக்கிய நாடு சாசனம் மற்றும் மாநிலத்தின் ஏனைய பன்னாட்டுக் கடப்பாடுகளை ஒத்துள்ள உள்ளூர்ச் சட்டம் தான் வரையறுக்கப்பட்ட சட்டமாகும். இதன்படி மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரமும் செயற்படுத்தப்பட்டு, அனுபவிக்கப்பட வேண்டும். இந்த உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாத்தல், வலுப்படுத்தி உணரச் செய்வதற்காக தற்போதைய உறுதிமொழியில் குறித்த அனைத்துப் பணிகளும் இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட வேண்டும்.

பிரிவு 4

தற்போதைய உறுதி மொழியில் கண்டுள்ள எதுவும் ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் நோக்கங்களுக்கு அல்லது கொள்கைகளுக்கு ஊறு விளைவிப்பதாக அல்லது முரண்படுவதாக அல்லது மனித உரிமைகள் குறித்து உலகளாவிய உறுதி மொழியின் அல்லது மனித உரிமைகள் குறித்த ஏனைய பன்னாட்டு சாசனங்கள் மற்றும் இதற்கு பொருந்தத்தக்க ஏனைய பன்னாட்டு (உறுதிமொழிகள் மற்றும் பொறுப்புகளின் விதித்துறைகளை கட்டுப்படுத்துவதாக அல்லது மதிப்பைக் குறைப்பதாகப் பொருள்கொள்ளக் கூடாது.)

பிரிவு 5

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை வலுப்படுத்தி பாதுகாக்கும் நோக்கத்திற்காகப் பின்வருபவை குறித்து ஒவ்வொருவருக்கும் தேசிய மற்றும் உலக அளவில் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

(a) அமைதியாகக் கூட்டம் நடத்துதல் அல்லது ஒன்று கூடுதல்

(b) அரசு சாரா அமைப்புகள், சங்கங்கள் அல்லது குழுக்களை ஏற்படுத்தி அவற்றில் சேர்ந்து பங்கு பெறுதல்.

(c) அரசு சாரா அல்லது அரசு அமைப்புகளிடையே தொடர்பு கொள்ளுதல்.

பிரிவு 6

பின்வருவனவற்றிற்காக ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

(a) உள்ளூர்ச் சட்டம், நீதி அல்லது நிருவாக முறைகளில் இந்த உரிமைகளுக்கும் சுதந்திரதிற்கும் எவ்வாறு செயல்வடிவம் அளிக்கப்படுகிறது என்ற தகவலைப் பெறுவது உட்பட அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் பற்றிய தகவலை அறிதல், கோருதல், பெறுதல் வைத்திருத்தல்.

(b) அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் குறித்த தகவல் அல்லது செய்தியை தாராளமாக வெளியிடுவதற்கு, தெரிவிப்பதற்கு அல்லது ஏனையோருக்குப் பரப்புவதற்கு மனித உரிமைகள் மற்றும் ஏனைய பொருந்தத்தக்கப் பன்னாட்டு சாசனங்களில் வகை செய்தவாறு

(c) அனைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை சட்டப்படியும் நடைமுறையிலும் கடைப்பிடிப்பது குறித்து ஆய்வு செய்தல், விவாதித்தல் கருத்துக்களைத் தெரிவித்தல், மற்றும் பெறுதல் இதன் மூலமாகவும் ஏனைய பொருத்தமான வழிமுறைகள் மூலமாகவும் இதுகுறித்துப் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தல்.

பிரிவு 7

புதிய மனித உரிமை கருத்துக்களை மற்றும் கொள்கைகளை உருவாக்கி விவாதிக்கவும், அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு பரிந்துரைக்கவும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

பிரிவு 8

1. ஒரு நபரின் நாட்டைச் சேர்ந்த அரசியல் பங்கு பெறவும், பொது விவகாரத்தை நடத்தவும், வேறுபாடற்ற அடிப்படையில் எளிதல் அணுகுவதற்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

2. பொதுப் பொருண்மைகளை சம்பந்தப்பட்ட அரசு அமைப்புகள், முகவமைப்புகள் மற்றும் நிறுவனங்களிடம் பணியை மேம்படுத்த விமர்சனங்களையும் செயற்குறிப்புகளையும் அளிக்கவும், மனித உரிமைகள் மற்றும் உணரப்படுத்துவதை தடை செய்யும் அல்லது கவனத்தை ஈர்க்கவும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உள்ள உரிமையும் இதில் அடங்கும்.

பிரிவு 9

1. தற்போதுள்ள உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மனித உரிமைகள் மேம்படுத்தி, பாதுகாப்பது உட்பட, தனி நபர் ஒருவருக்கு தனியாகவோ மற்றும் பிறருடன் கூட்டாகவோ இணைந்து, மனித உரிமைகளை மற்றும் அடிப்படை உரிமையைப் பெறுவதற்கும், இத்தகைய உரிமைகள் மீறப்படுகின்ற நேர்வில், இதற்கு தீர்வு காணும் முனைப்பான நடவடிக்கைகளிலிருந்து பயனடையவும், பாதுகாக்கப்படவும் ஒவ்வொருக்கும் உரிமை உண்டு.

2. இந்நிலையில் உரிமைகள் அல்லது சுதந்திரம் மீறப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டுகின்ற ஒவ்வொருவரும், நேரடியாக அல்லது சட்டத்திற்கிணங்க அனுமதிக்கப்பட்ட முறையீட்டின் மூலம் தற்காப்பான, நடுநிலையான மற்றும் தகுதிவாய்ந்த நீதித்துறை மற்றும் சட்டத்துறையால் ஏற்படுத்தப்பட்ட ஏனைய அதிகார மன்றத்தின் முன்பாக, முறையீடு செய்யவும் அந்த முறையீட்டைப் பொது விசரானை வாயிலாக உரிய முறையில் ஆய்வு செய்யப்படவும் சட்டத்திற்கிணங்க இத்தகைய அதிகார மன்றத்திடமிருந்து இதற்கான தீர்வைப்

பெறவும் உரிமை உண்டு. இத்தகைய தீர்வில் ஒரு தனி நபரின் உரிமையோ சுதந்திரமோ மீறப்பட்டிருப்பதாக கருதப்பட்டிருந்தால் உரிய வகையில் இழப்பீடு அளிப்பது உட்பட, அவரது குறைகளைக் களைய வகை செய்வதோடு அளவிற்கு அதிகமான காலதாமதம் ஏதுமின்றி, பயன்தருகிற முடிவுகளை எடுத்துக் தீர்வு வழங்கலாம்

3. இது போலவே, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் மீறப்படுவதாகக் கருதப்பட்டால்,

*(அ)* அரசின் சட்ட ரீதியான அமைப்பு முறையின் வாயிலாக வகை செய்யப்பட்டுள்ள, தகுதி வாய்ந்த உள்ளூர் நீதித்துறை நிருவாகம் அல்லது சட்டபூர்வ அதிகார மன்றங்கள் அல்லது தகுதிவாய்ந்த ஏதோவொரு பிற அதிகார மன்றத்திற்கு இத்தகைய மீறல்கள் குறித்த கொள்கைகள் மற்றம் தனிப்பட்ட அதிகாரங்கள் மற்றும் அரசு அமைப்புகள் குறித்து மனு அனுப்பவும் அல்லது ஏனைய உரிய முறையின் வாயிலாக புகார் செய்யவும், (இத்தகைய புகார்களுக்கு மேற்சொன்ன அமைப்புகள், அதிகளவு காலதாமதம் ஏதுமின்றி, தங்களுடைய முடிவுகளை அளிக்க வேண்டும்*)*

ஆ*)* தேசிய சட்டத்திற்கு இணங்கவும் மற்றும் உலகளாவிய கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்கு பொருந்ததக்கதாகவும் அவர்களுளுடைய கருத்துக்களை உருவாக்குகின்ற வகையில், பொது விசாரணைகளில், நடவடிக்கைகளில் மற்றும் வழக்கு விசாரணைகளில் கலந்து கொள்ளவும்.

இ*)* மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுந்திரத்தை பாதுகாக்கின்ற வகையில், தொழில் முறையில் தகுதி வாய்ந்த சட்ட உதவி அல்லது பொருத்தமான ஏனைய ஆலோசனை மற்றும் உதவிகளை நல்கவும் மற்றும் அத்தகைய நடவடிககைளுக்கு வகை செய்யவும், ஒவ்வொரு தனி நபருக்கும் தனியாகவோ அல்லது பிறருடன் கூட்டாகவோ இணைந்து செயற்பட உரிமை உண்டு.

4. இது போலவே, உலக நாடுகள் சார்ந்த ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளுக்குப் பொருந்துகின்ற வகையில், மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரம் தொடர்பானவை குறித்து உலகளாவிய அமைப்புகளை தடையின்றி அணுகவும், கடிதத் தொடர்பு கொள்ளவும், ஒவ்வொரு தனி நபரும் தனியாக அல்லது பிறருடன் கூட்டாக இணைந்து பொதுவான முறையில் அல்லது சிறப்புத் தகுதியின் அடிப்படையில், அத்தகைய தகவல்களைப் பெற்று, கருதிப்பார்க்கவும் உரிமை உண்டு.

5. அரசு, தன்னுடைய அதிகார வரம்பின் கீழ் வரும் யாதொரு ஆட்சிப் பகுதியிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் மீறப்பட்டிருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்ற நேர்வில், உரிய நேரத்தில், நடுநிலையான விசாரணை நடத்த வேண்டும் அல்லது குறிப்பிட்ட அப்பகுதியில் விசாரணை நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு 10

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மீறுகின்ற வகையிலான செயற்பாடுகளில் யாதொரு நபரும் ஈடுபடவோ அல்லது தேவையான நேர்வுகளில் செயற்படுத்தவோ கூடாது மற்றும் மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்களை மீறுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட மறுக்கும் யாதொரு நபரும் தண்டிக்கப்படவோ அல்லது யாதொரு வகையான பாதகமான நடவடிக்கைகளுக்கு அவரை உட்படுத்தவோ கூடாது.

பிரிவு 11

ஒவ்வொரு தனி நபருக்கும் தனியாகவோ அல்லது பிறருடன் கூட்டாகவோ இணைந்து, சட்டப்படி அவருடைய பணியில் அல்லது தொழில் முறையில் செயற்பட உரிமை உண்டு. ஒவ்வொரு தனி நபரும் அவருடைய தொழில்முறை காரணமாக, பிறருடைய மதிப்பு, உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் பாதிப்படைய நேர்ந்தால், பிரிவின் உரிமைகளையும் மற்றும் சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும்., பணி மற்றும் தொழில்முறை நடத்தைகளும், ஒழுக்கவியலும் தேசிய மற்றும் உலக நாடுகளில் வரையறைகளுக்கிணங்க இருத்தல் வேண்டும்

பிரிவு 12

1. ஒவ்வொரு தனி நபரும் தனியாகவோ அல்லது பிறருடன் கூட்டாகவே இணைந்து, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் மீறப்படுவதை எதிர்த்து அமைதியான நடவடிக்கைகளில் ஈடுபட உரிமை உண்டு.

2. ஒவ்வொரு தனி நபரும் தனியாகவோ அல்லது பிறருடன் கூட்டாகவோ இணைந்து, யாதொரு வன்முறையால், அச்சுறுத்தலால், எதிர்தாக்குதலால் நடைமுறையில் அல்லது உரிமை அளிப்பதில் பாதகமான பாகுபாடு காட்டப்படுவதை எதிர்த்தும் மற்றும் தற்போதுள்ள உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான உரிமைகளைச் சட்டப்படி செயற்படுத்தியதன் விளைவாக அவருக்கு எதிராகச் செல்வாக்கைப் பயன்படுத்தி, ஒரு சார்பாக மேற்கொள்ளப்படும் யாதொரு நடவடிக்கையை எதிர்த்தும், ஒவ்வொரு நபரும் தகுதி வாய்நத அதிகாரிகளால் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு, அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

3. இது தொடர்பாக, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறுதல் மற்றும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைககளை பாதிக்கும் வகையில் குழுக்கள் அல்லது தனி நபர்கள் மேற்கொள்கின்ற வன்முறைச் செயல்கள் ஆகியவற்றின் காரணமாக விடுபாடுகள் உட்பட அமைதியான வழிமுறைகள், நடவடிக்கைகள் மற்றும் செயல்கள் மூலம் எதிராக அல்லது முரணாக செயற்படுவதிலிருந்து தேசிய சட்டத்தின் கீழ் திறம்பட பாதுகாக்கப்படுவதற்கு ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

பிரிவு 13

தற்போதைய உறுதி மொழியின் 3ஆம் பிரிவின்படி, அமைதி வாயிலாக, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்திப் பாதுகாக்கின்ற செயல் நோக்ககத்திற்காக, ஆதாரங்களை வேண்டுவதற்கும், பெறுவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் கூட்டாகவும் உரிமை உண்டு.

பிரிவு 14

1. அனைத்து நபர்களின் உரிமையியல், அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் பண்பாட்டு உரிமைகளை, மாநிலத்தின் அதிகார வரம்பின்கீழ் அனைவரும் அறிந்து கொள்வதை மேம்படுத்துவதற்கு, சட்டம், நீதி நிருவாக அல்லது ஏனைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பொறுப்பு மாநிலத்திற்கு உள்ளது.

2. இத்தகைய நடவடிக்கைகள் ஏனையவற்றிக்கிணங்க பின்வருபவையும் அடங்கும்.

(a) தேசிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் பொருந்தத்தக்க அடிப்படைப் பன்னாட்டு மனித உரிமைகள் ஆவணங்களை வெளியிடுதல் மற்றும் எல்லா இடங்களிலும் கிடைக்கச் செய்தல்

(b) பன்னாட்டு மனித உரிமைகள் ஒப்பந்தங்களால் அமைக்கப்பட்டு அதன் தரப்பாக இருக்கின்ற அமைப்புகளுக்கு, மாநிலத்தால் அளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறையான அறிக்கைகள் உட்பட மனித உரிமைகள் பிரிவிலுள்ள பன்னாட்டு ஆவணங்களையும் மேலும் இத்தகைய அமைப்புகளின் கலந்துரையாடல்களின் சுருக்கப்பதிவுகள் மற்றும் அலுவலக அறிக்கைகளையும் முழுமையாகவும் சமநிலையாகவும் பெறுதல்.

3. மாநிலம் அதன் அதிகாரவரம்பின் கீழுள்ள அனைத்துப் பகுதிகளிலும், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும், மேலும் தற்சார்பற்ற தேசிய அமைப்புகளை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும், அரசு அல்லது பொது அதிகாரிகள் குறித்து சாதாரண மக்கள் அளித்த புகார்கள் குறித்து பரிசீலனை செய்து அறிக்கை அளிக்கின்ற அரசு அதிகாரிகள், மனித உரிமைகள் ஆணையங்கள் அல்லது ஏனைய யாதொரு வடிவிலான தேசிய அமைப்பாக இருந்தாலும் உரியவாறு மாநிலம் வகை செய்து ஆதரவளிக்கும்.

<u>பிரிவு 15</u>

கல்வியின் அனைத்து நிலைகளிலும் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் குறித்த கற்பித்தலை மேம்படுத்தி உதவி செய்வதுடன், வழக்குரைஞர்கள், சட்ட அமலாக்க அதிகாரிகள், ஆயுதப்படை பணியாளர்கள், பொது அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பு வகிக்கின்ற அனைவரும், அவர்களுடைய பயிற்சித்திட்டத்தில், மனித உரிமைகள் கற்பித்தலின் உரிய அடிப்படைக் கொள்கைகள் உள்ளடங்கியுள்ளன என்பதை உறுதி செய்கின்ற பொறுப்பும் அரசுக்கும் உள்ளது.

<u>பிரிவு 16</u>

தனிநபர்கள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் அது தொடர்பான அமைப்புக்கள, அவர்கள் தத்தம் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற சமுதாயங்கள் மற்றும் சமூகங்களின் பன்முகப் பின்னணிகளை மனதில் கொண்டு, நாடுகளுக்கிடையே மற்றும் அனைத்து இனம் மற்றும் மதங்களுக்கிடையே புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, அமைதி மற்றும் தோழமை உறவுகளை மேற்கொண்டும் ஏனையவற்றிற்கிடையே ஒருமை வலுப்படுத்துவதற்குக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி போன்ற செயற்பாடுகள் வாயிலாக மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் விழிப்புணர்வு கொள்ளச் செய்வதற்கு இவர்களின் பங்கு முக்கியமானதாகும்.

<u>பிரிவு 17</u>

தற்போதைய உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பயன்படுத்தி தனித்தனியாகவும் பிறருடன் கூட்டாகவும் செயற்படுகிற எவரொருவருக்கும், பொருந்தத்தக்க பன்னாட்டுக் கட்டுப்பாடுகளுக்கு இணங்க உள்ளவையும், ஒரு ஜனநாயக சமுதாயத்தில், பிறருடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உரிய அங்கீகாரம், மரியதை ஆகியவற்றைப் பெறுதல், நற்பண்பு, பொது அமைதி, பொது நலன் ஆகிய நியாயமான தேவைகளை நிறைவு செய்தல் ஆகியவற்றுக்காகவே சட்டத்தின் மூலம் தீர்மானிக்கபடுகிறவையுமான வரையறைகளுக்கு உட்பட்டவராவர்.

பிரிவு 18

1. சமுதாய நிலையிலும், சமுதாயத்திற்குள்ளும் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள்ளன. அத்தகைய சமுதாயத்தில் மட்டுமே அவரவரின் தடையற்ற ஆளுமை பண்பும், வளர்ச்சியும் சாத்தியமாகும்.

2. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதிலும், ஜனநாயக சமுதாயங்கள் நிறுவனங்கள், நடைமுறைகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்கும், முன்னேற்றத்திற்கும் பங்களிப்பைச் செய்வதிலும் தனிப்பட்டவர்கள், குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் முக்கியமான பங்கினையும், பொறுப்பையும் பெற்றுள்ளன.

3. சமூக மற்றும் பன்னாட்டு அமைதிக்கான ஒவ்வொருவரின் உரிமையை மேம்படுத்துவதற்குப் பங்காற்றுவதில் தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளும் சம பொறுப்பையும் பெற்றுள்ளன. அதில், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய உறுதிமொழி மற்றும் பிற மனித உரிமைகள் ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை முழுவதுமாக உணர்ந்து கொள்ள முடியும்.

பிரிவி 19

யாதொரு தனி நபர், குழு அல்லது சமுதாயத்தின் அங்கம் அல்லது யாதொரு மாநிலம், தற்போதைய உறுதிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட யாதொரு நடவடிக்கையில் ஈடுபடுவதை அல்லது செயலை மேற்சொல்லப்பட்ட உறுதிமொழிகளில் எவையும் ஆதரவாகக் கொள்வதைக் குறிப்பிடுவதாகப் பொருள் கொள்ளக் கூடாது.

பிரிவு 20

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் விதித்துறைகளுக்கு மாறான முறையில் தனிநபர்கள், தற்போதைய உறுதிமொழியில் உள்ள எவையும் தனிநபர்களின் குழுக்கள், நிறுவனங்கள் அல்லது அரசு சாரா அமைப்புகளின் நடவடிக்கைகளை ஆதரிக்கவோ மேம்படுத்தவோ அரசை அனுமதிப்பதாகப் பொருள் கொள்ளக்கூடாது.